பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

21 ] சென்னை—ஞாயிறு, செப்டம்பர் 1, *1946.* [ விலை. அணா. 2

## திருடர்களை இயற்கை முறையில் திருத்துதல்

காந்தியடிகள் உருலியில் இருந்த சமயம் அந்த கிராமத்திலுள்ள ஒருவர் வீட்டில் திருடர்கள் புகுந்து நகைகளைத் திருடிக் கொண்டு அவரைக் காயப்படுத்தி விட்டார்கள். அவருக்குச் சிகிச்சை செய்வதற்காக அவரை ஆச்கிரமத்திற்குக் கொண்டு வந்தார்கள். அன்று நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அதைக் குறித்து காந்தியடிகள் கூறியதாவது :—

“இந்த மாதிரியான திருட்டு விஷயத்தில் மூன்று விதமாக நடந்து கொள்ளலாம். முதலாவது வழி போலீஸாருக்குத் தெரிவிப்பது. அதுதான் நாம் சர்வ சாதாரணமாக அனுஷ்டித்துவரும் பழைய வழி. இப்படிச் செய்வதால் அநேக சமயங்களில் எவ்வித பயனும் ஏற்படுவதில்லை. போலீஸார் லஞ்சம் வாங்குவதற்குத் தான் பயன்படுவதாய் இருக்கின்றது. இரண்டாவது வழி சும்மா இருந்து விடுவது. இதைத் தான் சாதாரணயாகக் கிராம வாசிகள் செய்து வருகிறார்கள். இது கோழைத்தனம். அதனால் பலமாய் கண்டிக்கத் தக்கதாகும். கோழைத்தனம் உள்ள வரையிலும் குற்றங்கள் செழித்து வளர்ந்து கொண்டிருக்கும். அதுமட்டுமன்று, நாமும் குற்றம் செய்வதற்கு உடந்தையாய் இருப்பவர்களாவோம். நான் சிபார்சு செய்யக் கூடிய மூன்றாவது வழி பரிசுத்தமான சத்தியாக்ரஹ வழியாகும். அந்த வழியை அனுஷ்டிக்க வேண்டுமானால் நாம் திருடர்களையும் கூட சகோதர, சகோதரிகளாகவும் திருட்டு முதலிய குற்றங்களை நோய்களாகவும் அந்தக் குற்றங்களைச் செய்பவர்களை நோயாளிகளாகவும் கருத வேண்டும். திருடரிடத்தில் துவேஷம் கொண்டு அவரைத் தண்டிக்க முயலுவதற்குப் பதிலாக நாம் அவர்கள் குற்றஞ் செய்வதற்காக ஏற்பட்ட காரணத்தை அறிந்து அதை நீக்குவதற்கு முயல வேண்டும். உதாரணமாக அவருக்கு ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்கலாம். யோக்கியமான முறையில் ஜீவனத்திற்கு வேண்டிய சாதனங்களைக் கொடுக்கலாம். இந்த விதமாக அவருடைய வாழ்வைத் திருத்தலாம். திருடர் என்போர் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்பதை மறந்து விடலாகாது. நாம் நம்முடைய மனத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் நமக்கும் திருடர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதைக் கண்டு கொள்வோம். பிறரைக் கெடுத்து தவறான வழிகளில் திரவியம் தேடும் செல்வந்தர்கள் சட்டைப் பையிலுள்ள பணத்தை தெரியாமல் எடுத்துக் கொள்ளும் திருடர்களையும், வீட்டில் கன்னம் வைத்து பொருளை எடுத்துக் கொள்ளும் திருடர்களையும போன்றவர்கள் தான். ஒரே ஒரு வித்தியாசந் தான். திருடர்கள் அகப்பட்டுக் கொண்டு தண்டிக்கப்படுகிறார்கள். தனவந்தர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் சமூகத்தால் மதிக்கப்படுகிறார்கள். சரியானபடி பார்த்தால் நியாயமான தேவைகளுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகப் பொருளைத் தேடுவதையும், சேர்த்து வைப்பதையும் திருட்டென்றே கூற வேண்டும். எல்லோருக்கும் வேலையும், கூலியும் கிடைக்கும்படியான விதத்தில் சமூகத்தை அமைத்து விட்டால் அதன் பிறகு திருட்டு மிருக்காது, திருடர்களும் இருக்க மாட்டார்கள். நான் அமைக்க விரும்பும் சுயராஜ்யத்தில் திருடர்கள் முதலிய குற்றவாளிகள் இருக்க மாட்டார்கள். அவர்கள் இருந்தால் சுயராஜ்யம் பேருக்கு மட்டுமே சுயராஜ்யமா யிருக்கும். சமூக வாழ்வில் நோயிருப்பதைக் காட்டும் அறிகுறியே குற்றவாளி இருப்பதாகும். இயற்கைச் சிகிச்சை முறை உடம்பு, மனம், ஆன்மா மூன்றையும் குணப்படுத்த வேண்டுமென்று நான் கூறுவதால் நாம் மனத்தையும், ஆன்மாவையும் தூய்மையாக்கி நம்மிடையே பரிபூரணமான சமூக ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.

### சத்தியாக்ரஹ வழி

குற்றவாளியை இயற்கை முறையில் அதாவது சத்தியாக்ரஹ முறையில் திருத்த வேண்டுமானால் நாம் குற்றம் நடக்கும் காலத்தில் கையைக் கட்டிக் கொண்டு சும்மா யிருத்தல் ஆகாது. பரிபூரணத் தன்மை அடைந்தவர்கள் தான் உலக விவகாரங்களிலிருந்து பரிபூரணமாக விலகி யிருக்க முடியும். ஆனால், அத்தகைய பரிபூரணமான தன்மையை அடைந்து விட்டதாக யாரால் கூற முடியும்? நடுக்கடலில் சில சமயங்களில் திடீரென்று கடல் ஆடாமல் அசையாமல் அமைதியாய் இருப்பதுண்டு. அதைக் காணும் பொழுதெல்லாம் அனுபவம் பெற்ற மாலுமிகள் அதிகமாகக் கவலைப்படுவார்கள். முற்றிலும் அமைதியாய் இருப்பது சமுத்திரத்தின் சாதாரண வழக்கமன்று. அது போல்தான் வாழ்வாகிய சமுத்திரத்திலும் அத்தகைய அமைதி புயல் காற்றும் மழையும் வருவதையே குறிக்கும். ஆதலால் சத்தியாக்ரஹி அடிக்கவும் கூடாது. அடி பணியவும் கூடாது. தன்னைத் திருத்திக் கொள்வதன் மூலம் குற்றவாளியைத் திருத்த முயல வேண்டும். ஏக காலத்தில் இரண்டு குதிரைகளின்மேல் சவாரி செய்ய முயலலாகாது. போலீஸ் உதவியைத் தேடுபவர் சத்தியாகிரகத்தை அனுஷ்டிப்பதாகச் சொல்வது ஏமாற்றாகும். போலீஸ் உதவியைத் தேடுவதை விட்டு விட்டால்தான் சத்தியாக்கிரக வழியை அனுஷ்டிக்க முடியும். குற்றவாளி தானாகவே தன்னை போலீஸாரிடம் ஒப்புவித்து விடலாம், அது வேறு விஷயம். நாம் போலீஸாரிடம் போய்ச் சொன்னால் குற்றவாளியின் இதயத்தை இளக்கவும் முடியாது. நம்பிக்கை பெறவும் முடியாது. அது முற்றிலும் நம்பிக்கைத் துரோகமாகவே இருக்கும். போலீஸாருக்குத் தெரிவிப்பவர் குற்றவாளியைத் திருத்துகிறவர் ஆகமாட்டார். அனேக குற்றவாளிகள் என்னிடம் வந்து தாங்கள் குற்றம் செய்ததை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் அதைப் போலீஸாரிடம் தெரிவிக்க மறுத்துவிட்டேன். குற்றவாளி

சத்தியாக்கிரகியிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அதைச் சத்தியாக்கிரகி போலீஸாரிடம் தெரிவிக்க வேண்டிய கடமை கிடையாது. சத்தியாக்கிரகி ஒரு நாளும் நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டார். உருலி கிராமத்திலுள்ள நீங்கள் குற்றவாளிகள் விஷயத்தில் சத்தியாக்கிரக முறையையே அனுஷ்டிக்க வேண்டும். குற்றவாளிகளை அவர்களுடைய வீட்டில் போய்ப் பார்த்து அவர்களுக்கு அன்பும் சேவையும் செய்து அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்று அவர்களைத் திருத்தி யோக்கியமான முறையில் வாழ்வை நடத்துமாறு செய்ய வேண்டும்."

பியாரேலால்.

## கேள்வியும் பதிலும்

கேள்வி :—நான் தங்கள் யோசனைப்படியே ராம நாமபஜனை செய்து வருகிறேன். அதன் காரணமாகக் குணமடைந்தும் வருகிறேன். க்ஷயரோகத்திற்காக வைத்திய சிகிச்சையும் நடந்து வருகிறது. குறைவாக உண்பதும், சரியான உணவையுண்பதும் ஆரோக்கியத்தைத் தருமென்றும் ஆயுளை அதிகரிக்குமென்றும் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள். நான் சென்ற இருபத்தைந்துவருஷகாலமாகக்குறைவாகவேஉண்டு வருகிறேன். அப்படியிருக்க எனக்கு க்ஷயரோகம் வரவேண்டிய காரணமென்ன? இந்தத் துரதிஷ்டத்திற்கு இந்த ஜென்மத்திலோ முந்திய ஜென்மத்திலோ செய்த தீவினையைத் தான் நான் நொந்து கொள்ள வேண்டுமென்று கூறுகிறீர்களா?

மனிதன் 125 வயதுவரை வாழ முடியும் என்று சொல்லுகிறீர்கள். அப்படியானல் உங்களுக்கு எவ்வளவோ உதவியாயிருந்த மகாதேவதேசாயை ஏன் கடவுள் இவ்வளவு சீக்கிரத்தில் அழைத்துக் கொண்டு போகவேண்டும்? அவர் நல்ல உணவை அளவாகத்தானே சாப்பிட்டார். அவர் தங்களைக்கடவுளாகப் பாவித்து ஊழியமும் செய்தாரே? அவர் ஏன் இருதய நோய்க்கு இரையானர். கடவுள் அவதார புருஷராகக் கருதப்படுகிற ராமகிருஷ்ண பரமஹம்ஸர் க்ஷயரோகத்தைப் போல் கொடிய நோயான புற்று நோய்க்கு இரையானர். அதை எதிர்த்து நிற்க அவரால் ஏன் முடியாமலிருந்தது?

பதில்:—ஆரோக்கியம் சம்பந்தமாக எனக்குத் தெரிந்த சுகாதார விதிகளை நான் விளக்கி வந்திருக்கிறேன். நல்ல உணவின் அளவு எல்லோருக்கும் ஒரே விதமாக இருக்காது. அது விஷயமான நூல்களைப் படித்து கவனமாக சிந்தித்துத்தான் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற அளவை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதும் கூட பிழை நேர்ந்து விடலாம். நன்ருக அறியாமலும் இருந்து விடலாம். அதனல் தான் பெரியோர்கள் வாழ்வை ஒரு சோதனைசாலை என்று சொல்லுகிருர்கள். நாம் பிறர் அனுபவத்திலிருந்து விஷயங்களை அறிந்து கொண்டு முன்னேற வேண்டும். அதில் இடையூறு ஏற்பட்டால் பிறரை மட்டுமின்றி தம்மைக் கூட குறை கூறிக் கொள்ள வேண்டியதில்லை. எந்த விதியையும் எடுத்த உடனேயே குறை கூற ஆரம்பித்து விடக்கூடாது. சிந்தித்துப் பார்த்த பின்பும் தவருகத் தோன்ருமானல் சரியான விதியைத் தெரிந்து சொல்ல வேண்டும் தங்கள் நோய்க்குப் பல காரணங்களிலிருக்கலாம். நீங்கள் பஞ்சபூத சக்திகளை சரியானபடி உபயோகித்தீர்களா இல்லையா என்பதை யார் சொல்ல முடியும். இயற்கைவிதிகளை நான் நம்பிவருவதால் நீங்கள்ஏதோ தவறு செய்து இருக்கிறீர்கள் என்று சொல்லவேண்டியவனகவே இருக்கிறேன். சுகாதார விதிகள் தவருனவை என்று கூறுவதைவிட மகாதேவ தேசாயும் ராமகிருஷ்ண பரமஹம்சரும் தவருக நடந்து கொண்டார்கள் என்று கூறுவதே பொருத்தமாகும். இந்த விதிகள் என்னுடைய சிருஷ்டிகள் அல்ல. அனுபவசாலிகள் கூறும் இயற்கை விதிகளாகும். நான் அவைகளை நம்புகிறேன். அவற்றை அனுசரித்து நடக்க முயன்று வருகிறேன். எப்படிப் பார்த்தாலும் மனிதன் பரிபூர்ணத் தன்மை இல்லாதவனே ஆவான். அவன் எப்படி உண்மை முழுவதையும் அறிந்து கொள்ள முடியும்?

அந்த விதிகளை ஆங்கில வைத்திய முறை பயின்றவர்கள் நம்பவில்லை என்பதையும், அவர்கள் நம்பினலும் வேறு பொருளிலேயே நம்புகிருர்கள் என்பதையும் கொண்டு இந்த விதிகளைத் தவறு என்று கூறிவிடமுடியாது. நான் கூறியது எதுவும் மேலே கூறிய இருவருடைய மகிமையையும் குறைத்து விடாது. குறைத்துவிட இடங்கொடுக்கவுங் கூடாது.

கேள்வி :—14-4-46 ல் வெளியான ஹரிஜன பந்துவில் கடவுளே விதியாகவும் விதியை வகுத்தவராகவும் இருக்கிருர் என்று தாங்கள் கூறியிருக்கிறீர்கள். அது எனக்கு விளங்கவில்லை. சட்டங்கள் மனிதரால் செய்யப்படுகின்றன, அவை காலத்துக் காலம் மாறிவருகின்றன. திரௌபதைக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள். அப்படியிருந்தும் அவளைப் பதிவிரதை என்றே கருதிவந்தார்கள். இப்பொழுது அப்படிநடப்பவளைத் தவறு செய்பவளாகவே கருதுகிருர்கள்.

பதில்:—நான் சட்டம் என்று சொன்னது கடவுள் வகுக்கும் சட்டத்தையே யாகும். அந்தச் சட்டத்தை மனிதர்கள் தங்கள் அறிவுக்குத் தக்கவாறு அர்த்தப் படுத்திக் கொள்ளுகிருர்கள். உதாரணமாக பூமி சுற்றுவது இயற்கைவிதிகளில்ஒன்று. இன்று நாம்அதைச் சரியானதாகவே நம்புகிறோம். ஆனல் கலிலியோவுக்கு முன்போ வானசாஸ்திரிகள் வேறு விதமாக எண்ணி வந்தார்கள். மகாபாரதமானது அறிவு புகட்டுவதற்காக ஏற்பட்ட மறைமுகமானகதையே அன்றி நடந்ததைக் கூறும் சரித்திரம் அன்று. திரௌபதை என்ருல் ஒரு பெண்ணைக எண்ணக் கூடாது. ஐம்புலன்களோடு சேர்ந்துள்ள ஆன்மா என்று தான் அர்த்தப் படுத்த வேண்டும்.

கேள்வி :—கடவுளை அறிவு மூலமாக அறிய முடியாது. நம்பிக்கை மூலமாகத்தானே அறிய முடியும்? நீங்கள் மறு ஜென்மத்தை நம்புகிறீர்களா? அது கஷ்டப்படுகிற ஜனங்கள் தம்மைத் தாமே தேற்றிக் கொள்வதற்காக ஹிந்து மகரிஷிகள் ஏற்படுத்திய கொள்கையா?

பதில் :—கடவுளை அறிவால் அறிய முடியாது. அறிவு கொஞ்ச தூரம் தான் விஷயத்தை விளக்கிக் காட்டும். கடவுளை நம்பிக்கை மூலமாகவும் நம்பிக்கையால் பெறும் அனுபவம் மூலமாகவும் தான் கடவுளை அறிய முடியும்.

நாம் பெரியோர்களுடைய அனுபவத்தை நம்ப வேண்டும் அல்லது நாமே அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். பூரணமாக நம்புகிறவர்களுக்கு அனுபவம் உண்டாகாமல் போகாது. நன்மை தீமை வேறுபாடு ஒரு மனச் சமாதானத்துக்காக ஏற்பட்டதன்று. கடவுள் நம்பிக்கையும் அதற்காக ஏற்பட்ட தன்று. நன்மை தீமை மறு ஜென்மம் என்பன ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட உண்மைகளாகும். மறு ஜென்மம் உண்டென்னும் கொள்கையை அறிவினல் அறிந்து கொள்ள முடியும் என்பது என் எண்ணம்.

கேள்வி :—காங்கிரஸ் மகாசபை பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு அகிம்ஸா முறையில் போர் நடத்தி வருகிறது. ஆனல் காங்கிரஸ்காரர்கள் அதிகாரம் பெற்றதும் தவருன நெறியில் சென்று கஷ்டம் கொடுக்கும் தங்கள் சகோதரர்களைச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருக்கிருர்கள். அப்படிச் செய்வது சரியா? அதிகாரத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் அகிம்ஸா

முறையில் கலகங்களை அடக்க முயன்று பிராணத் தியாகம் செய்வதற்குரிய மனோதைரியம் இல்லாதவர்களாய் இருந்தால் அதுரவிசங்கர் மகாராஜ், தானே குருஜி போன்ற சிலரைத் தவிர மற்ற காங்கிரஸ்காரர்களெல்லோரும் அகிம்சையைப் பலவீனவர்களுடைய ஆயுதமாகவே உபயோகிக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது அல்லவா?

பதில்:—ஹிம்சை அகிம்சையைப் பற்றிய இந்தக் கேள்வி பழைய கேள்வி. இதைப்பற்றி நான் எவ்வளவோ எழுதியாய் விட்டது. அநேகருக்கு அகிம்சை பிடிக்கவில்லை. அப்படியே உங்களுக்கும் பிடிக்காதிருந்தால் அதை நீங்கள் விட்டு விடலாம். அதற்காக நான் உங்களைக் குறை கூறமாட்டேன். பிறர் குறை கூறினால் நீங்கள் லட்சியம் செய்யக் கூடாது. இது விஷயமாக நாம் அனுஷ்டிக்க வேண்டிய விதி இதுவாகும்.

"ரிஷிகளால் வகுக்கப்பட்டுப் பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படும் விதியானது நம்முடைய மனத்திற்கு உகந்ததாகத் தோன்றினால் அதை நாமும் அனுஷ்டிக்க வேண்டும்."

நம்முடைய மனதுக்கு உகந்தது, ரிஷிகள் வகுத்ததற்கும் பெரியோர்கள் அனுஷ்டிப்பதற்கும் விரோதமானதாய் இருந்தால் என்ன செய்வது என்று கேட்கக் கூடும். எந்த மனிதரும் தம்முடைய இஷ்டம் போல் நடப்பதால் ஏற்படக் கூடிய அபாயங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். இந்த விதமாகத்தான் அநேக சீர் திருத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. புதிய விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய சங்கராச்சாரியார்கள், தீண்டாமை வழக்கத்தை ஆதரித்தே வந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அறிவும் அன்பும் அதை ஹிந்து மதத்துக்கு ஏற்பட்ட ஒருகறையாகவே கருதுகின்றன. நம்முடைய கருத்தைத் தவறென்று பிறர் கருதினாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

கேள்வி:—*1920*-ஆம் வருஷத்திலிருந்து தாங்கள் பிரிட்டிஷ் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை ராவணனுடைய சைன்யங்களாக வர்ணித்து வருகிறீர்கள். காங்கிரஸ் சர்க்கார்களும் இந்தச் சைன்யங்களை உபயோகிக்கின்றன. சந்தேகத்தின்மேல் கைது செய்யப்பட்ட ஒருவரை பயமுறுத்துவதற்காகவேனும் குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி நிர்ப்பந்திப்பதற்காகவேனும் அடிப்பது குற்றம் என்று சர்க்கார் செய்துள்ள சட்டங்களே கூறுகின்றன. *1942* வருஷம் நடந்த புரட்சியின் போது என்னைப் போன்ற பலர் கைதியான பிறகு கடுமையாக அடிக்கப்பட்டார்கள். அந்த விதமாகப் போலீசார் செய்த அக்ரமங்களைக் காங்கிரஸ் சர்க்கார் விசாரிக்க வேண்டாமா?

பதில்:—நான் பிரிட்டிஷ் சர்க்காரை வெகு கடுமையாக இதற்கு முன்னாலும் கண்டித்திருக்கிறேன். இப்பொழுதும் கண்டிக்கிறேன். அதனால் பிரிட்டிஷ் சர்க்காரிடம் வேலைபார்க்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எல்லோருமே காங்கிரஸ் சர்க்காரின் கீழ் வேலை பார்த்தாலும் கூட சாத்தானுடைய சிஷ்யர்கள் தான் என்று சொல்ல முடியாது. போலீசார் *1942*ல் மட்டுமின்றி அதற்கு முன்னாலும் கூட அக்ரமங்கள் செய்திருந்தால் அவற்றை விசாரிப்பதற்கு காங்கிரஸ் கவர்மெண்டுக்கு உரிமையில்லை என்று யாரும் ஆட்சேபனை கூறவில்லை. ஆயினும் அந்த உரிமைகளைச் சதாகாலமும் உபயோகப் படுத்தி விடலாகாது. சில உரிமைகளை சில சமயங்களில் உபயோகப்படுத்தா திருப்பதே அறிவுடைமை என்பதை நாம் எல்லோரும் அறிவோம. தாங்கள் கூறுவது போன்ற அக்ரமங்களைப் பற்றி விசாரணை செய்யாதிருக்கும் கொள்கையையே காங்கிரஸ் பொதுவாகக் கையாண்டுவருகிறது. அத்தகைய அக்ரமங்களை நிரூபிப்பது கஷ்டமென்பதை நீங்கள் அறிவீர்கள். சந்தேகத்துக் கிடமில்லாத சந்தர்ப்பங்களில் விசாரணை நடத்தப் பட்டுவருகிறது என்றே எண்ணுகிறேன். ஆயினும் என்னுடைய யோசனை யாதெனில் காங்கிரஸ் சர்க்கார் சரியாக நடக்கிறதா நடக்க வில்லையா என்று நியாயாதிபதி போல் பரிசீலனை செய்யாமலிருக்க வேண்டுமென்பதே யாகும். காங்கிரஸ் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டது சரியான காரியமே என்று நம்பிக் கொண்டால் போதும்.

சேவா கிராமம் — மோ. க. காந்தி

## கொச்சி

கொச்சி மகாராஜா மலையாள ராஜ்யத்தைப் பற்றிக் கூறியது சம்பந்தமாக ஜுலை மாதம் *30*-ந் தேதி வெளியான ஹிந்துப் பத்திரிகையில் காணப்பட்ட செய்திகளை எல்லாம் படித்தேன். இப்பொழுது உள்ள அளவில் அது நல்லதுதான். நான் மகாராஜாவை அவருடைய மனோதைரியத்திற்காகப் பாராட்டுகிறேன். காது குளிர வார்த்தை சொன்னால் போதாது. காரியம் நடைபெற்றால்தான் பிரயோஜனம் ஆகும். திருவிதாங்கூர் சமஸ்தானமும் மற்ற சமஸ்தானங்களும் என்ன செய்யும் என்ன செய்யாது என்பதைக் கவனித்துக் கொண்டிராமல் மகாராஜா இன்றே தமது எண்ணத்தை நிறைவேற்றக் கூடிய காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் அது நிச்சயமாகப் பிரமாதமான முன்னேற்றமா யிருக்கும். கொச்சி சமஸ்தானம் இன்று பிரிட்டிஷ் மலபார் என்று கூறப்படும் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பாகமாக இருக்கச் சம்மதிக்குமா? கொச்சி மகாஜனங்கள் தாங்களாக மனமுவந்து அளிக்கும் பதவியை மகாராஜா ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறாரா?

சேவா கிராமம், — 24-8-46. — மோ. க. காந்தி

## நாம் அனைவரும் இந்தியர்களே

கோவாவிலிருந்து ஒரு ரோமன் கதோலிக்க மாணவர் படிப்பதற்காக பம்பாய்க்கு வந்திருக்கிறார். அவருடன் படிக்கும் மாணவர்களிற் சிலர் அவரை போர்த்துக்கீசியர் என்றும் அதனால் அன்னிய நாட்டார் என்றும் கூறினார்கள். அது அவருக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. ஹிந்துக்களிடையே காணப்படுவது போலவே கோவாவிலுள்ள ரோமன் கத்தோலிக்கரிடமும் ஜாதிப் பாகுபாடுகள் காணப்படுவதாக அவர் அவர்களிடம் கூறினார். ஆனால், அவர் கூற்றை அவர்கள் நம்பவில்லை. எந்த அன்னிய ஆட்சிக்கும் நாம் அடிமையில்லை என்ற உணர்ச்சி பெருக்கெடுத்திருக்கும்போது இந்த மாதிரி தவறுகள் ஏற்படுவது சகஜம். இந்த மாணவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் தங்களை பம்பாய் வாசிகள் என்று கூறிக் கொள்வதைவிட இந்தியர்கள் என்று கூறிக் கொள்வதே கௌரவம் என்று தெரிந்து கொள்வார்கள். அது போலவே தங்கள் நண்பரை கோவா வாசி என்று கூறாமல் இந்தியரென்று கூறுவதே கௌரவம் என்று அறிந்து கொள்வார்கள். ஒருவருடைய மதம் அவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது. ஆனால், அவர் எந்த தேச சமூகத்தைச் சேர்ந்தவரென்பது தனிப்பட்ட விஷயமல்ல. சமூகத்தார் எல்லோரையும் பொறுத்த விஷயமாகும். அதனால் அதனுடைய பலாபலன்களும் மகத்தானவை. கிறிஸ்தவ மதத்திற்குப் போனபிற்பாடு கூட ஜாதிகள் மறையவில்லை என்பது ஹிந்து மதத்திற்கு ஒரு இழுக்கேயாகும். இதைப் பற்றி ஒவ்வொரு ஹிந்துவும் நன்றாகச் சிந்திக்க வேண்டியதும், அதனால் என்னைப் போலத் தோட்டியாக வேண்டியதும் அவசியமாகும்.

சேவாகிராமம், — 23-8-46 — மோ. க. காந்தி.

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

செப்டம்பர் 1 ஞாயிறு 1946

## நான் மந்திரியானல்

பல மாகாணங்களி லிருந்தும் பூனவுக்கு வந்திருந்த தொழில் மந்திரிகளுடன் நான் ஜுலை மாதம் 29வ முதல் 30வ வரை கிராமக் கைத்தொழில்கள் விஷயமாயும் மூலாதாரக் கல்வி விஷயமாயும் பேசிக் கொண்டிருந்தேன். அதன் காரணமாகக் கடிதப் போக்கு வரத்தும் தனிப்பட்ட சர்ச்சைகளும் அதிகமாக உண்டாகி யிருக்கின்றன. அவற்றுள் பெரும் பாகம் கதர் பிரச்னையைப் பற்றியதாகும். அந்தப் பிரச்னையில் அக்கரை கொண்டவர்களுக்கும் மாகாண சர்க்காருக்கும் வழி காட்டும் பொருட்டு அந்தப் பிரச்னை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைக் கீழே தருகின்றேன்.

ஏப்ரல் மாதம் 28வ வெளியான ஹரிஜனப் பத்திரிகையில் நான் எழுதிய குறிப்பைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள என்னுடைய கருத்துக்கள் எவ்வித மாற்றமும் அடையாமல் அப்படியே இருந்து வருகின்றன. ஒரு விஷயம் தப்பு அபிப்பிராயம் உண்டுபண்ணி யிருக்கிறது. நான் நிர்ப்பந்த முறையைக் கையாளும் படி அந்தக் குறிப்பில் எழுதி யிருப்பதாகச் சில நண்பர்கள் கருதுகிறார்கள். அவர்கள் அப்படி எண்ணும் விதத்தில் நான் தெளிவாக எழுதாததைக் குறித்து வருத்தப் படுகிறேன். ஜனங்களுடைய பிரதிநிதிகளால் அமைக்கப்பட் டிருக்கும் சர்க்கார்கள் அந்தப் பிரச்னை சம்பந்தமாக என்ன காரியங்கள் செய்ய முடியும் என்ற கேள்விக்கு அந்தக் குறிப்பில் பதில் சொல்லி யிருக்கிறேன். அத்தகைய சர்க்கார்கள் ஜனங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தால் அதை நிர்ப்பந்தம் செய்வதாக அர்த்தப் படுத்தக் கூடாது என்று வைத்துக் கொண்டே அந்தப் பதிலை எழுதி யிருக்கிறேன். அப்படி நான் எண்ணிக் கொள்வது தவறாகாது என்று எண்ணுகிறேன். ஏனெனில் உண்மையாக ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்த சர்க்காருடைய ஒவ்வொரு செயலும் ஓட்டர்களுடைய சம்மதத்தைப் பெறுவதாகவே கருத வேண்டியதாகும். ஓட்டர்கள் என்பதில் ஓட்டராகப் பதிவு செய்யப்பட் டிருந்தாலும், செய்யப்படா விட்டாலும் எல்லா ஜனங்களும் அடங்குவார்கள். அதை மனத்தில் வைத்துக் கொண்டு தான், நான் ஜனங்கள் தாங்களாகவே கதரை உற்பத்தி செய்து உடுத்திக் கொள்ளும்படி செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட தேதிக்குப்பின் கிராமங்களுக்கு மில் துணி அனுப்பப்பட மாட்டாது என்று சர்க்கார் கிராம வாசிகளுக்கு அறிவித்துவிட வேண்டுமென்று எழுதினேன்.

ஏப்ரல் மாதம் 28வ நான் எழுதிய கட்டுரையின் அர்த்தம் எது வாயினும் இருக்கட்டும். நான் இப்போது கூறுவது யாதெனில், ஜனங்கள் சர்க்காருடன் மனமுவந்து ஒத்துழைக்கா விட்டால் கதரைப்பற்றி வகுக்கும் எந்தத் திட்டமும் கதர் மூலம் சுயராஜ்யத்தை அடைவது என்னும் லட்சியத்தைக் கைகூடச் செய்யாது. கதர் கதர் என்பதெல்லாம் அடிமைத் தனந்தான், அநாகரிகம் தான் என்று சிலர் கேலி செய்வது உண்மையாகி விடும். ஆனல் என்னுடைய எண்ணம் அதற்கு முற்றிலும் மாறானதாகும். கட்டாயப்படுத்திக் கதரை உற்பத்தி செய்து உடுத்தச் சொல்வது அடிமைத் தனத்தின் அடையாளந்தான். ஆனல் சொந்த உபயோகத்துக்காக விஷயமறிந்து தாமாக மனமுவந்து உற்பத்தி செய்து உடுத்துவதென்பது சுதந்திரத்தின் அடையாளமாகும். சகல விதத்திலும் சுய உதவி ஏற்படாவிட்டால் அது உண்மையான சுதந்திரமாகாது. ஒவ்வொருவரும், கதர் உற்பத்தி செய்வதைத் தம்முடைய உரிமையாகவும் கடமையாகவும் தாமாக மனமுவந்து கருதா விட்டால் அத்தகைய கதர் உற்பத்தியை நான் கொஞ்சமும் ஆதரிக்க விரும்பவில்லை.

இந்த விதமாகத் தயாரிக்கும் கதரை விற்கவும் செய்யலாமா என்று ஒரு நண்பர் கேட்கிறார். கதரை உபயோகத்துக்காகவே உற்பத்தி செய்ய வேண்டும். உபயோகத்துக்குப்போக அதிகமாக இருந்தால் தான் விற்கலாம். விற்பதற்காகவே உற்பத்தி செய்யக் கூடாது. நாம் கதரை உற்பத்தி செய்து விற்க ஆரம்பித்தது தற்காலிகமான அவசியத்தை முன்னிட்டேயாகும். நமக்குக் கதரைப் பற்றிய அறிவு குறைவாக இருந்ததும் ஒரு காரணமாகும். அனுபவ மென்பது ஒரு பெரிய ஆசிரியராகும். அது நமக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. அது கற்றுக் கொடுத்த பாடங்களில் முக்கியமானது கதருடைய பிரதான உபயோகம் எது என்று அறிவித்ததே யாகும். ஆனல் அந்தப் பாடம் தான் கடைசிப் பாடம் என்று எண்ண வேண்டாம். ஆயினும் நான் இந்தக் கவர்ச்சியான ஆராய்ச்சியை விட்டு விட்டு தலைப்பில் காணப்படும் கேள்விக்குப் பதில் கூற ஆரம்பிக்கிறேன்.

சர்க்கார் செய்யும் எந்தக் காரியமும் கிராமங்களைப் புனர் நிர்மாணம் செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டு செய்யப்பட வேண்டி யிருப்பதால் நான் மந்திரியானல் முதல் முதலாக நான் செய்யக் கூடிய வேலை எதுவாய் இருக்குமெனில், நிரந்தரமாகச் சர்க்கார் உத்யோகம் வகித்து வருபவர்களில் நான் செய்ய விரும்பும் கதர் வேலையைச் செய்யக் கூடிய திறமை வாய்ந்தவர்களாயும் கொஞ்சம் கூட லஞ்சம் வாங்காத யோக்கியர்களாயுமுள்ள உத்தியோகஸ்தர்களை தேர்ந்தெடுப்பதேயாகும். அப்படித் தெரிந்து எடுக்கப்படும் உத்தியோகஸ்தர்களில் சிறந்தவர்களைக் காங்கிரஸால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் அகில இந்திய சர்க்கா சங்கத்தோடும் அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தோடும் தொடர்பு வைத்துக் கொள்ளும்படி செய்வேன். கிராமக் கைத்தொழிலகளுக்கு எவ்வளவு ஆதரவு கொடுக்க முடியுமோ அவ்வளவு ஆதரவு கொடுக்கும்படியான ஒரு திட்டத்தைத் தயாரிப்பேன். கிராம வாசிகளை எந்தவிதமாகவும் நிர்ப்பந்திக்கக் கூடாது என்றும் அவர்கள் பிறருக்காக அடிமை போல் உழைக்கக் கூடாது என்றும் அவர்களுக்கு சுய உதவி கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலிய பொருள்களை உற்பத்தி செய்வதில் பிறரை எதிர்பாராமல் தாமே செய்து கொள்ள வேண்டுமென்றும் நான் நிபந்தனைகள் ஏற்படுத்துவேன். இந்த விதமாக என்னுடைய திட்டம் எல்லா விஷயங்களும் அடங்கியதாக இருக்கும். ஆதலால் என்னுடைய பிரதான உத்யோகஸ்தரை ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தினிடம் சென்று அதன் கருத்துக்களை அறிந்து கொள்ளும்படி செய்வேன்.

என்னுடைய திட்டப்படிக் கிராமவாசிகள் தங்களுக்குக் குறிப்பிட்ட திதேக்குப் பின்லை ல் துணி தேவையில்லை என்றும் தங்களுக்குப்பருத்தியையும் தேவையான கருவிகளையும் இனமாகக்கொடுக்

காமல் எளிதாக அவற்றின் விலையை செலுத்தக் கூடிய முறையில் தரவேண்டுமென்றும் தாங்களாகவே கூறுவார்கள். என்னுடைய திட்டத்தை எடுத்த உடனேயே மாகாணம் முழுவதிலும் நிறைவேற்ற ஆரம்பியாமல் ஏதேனும் ஒரு பகுதியிலேயே ஆரம்பித்து வைப்பேன். திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவைக்கும் விஷயத்தில் அகில இந்திய சர்க்கா சங்கத்தின் உதவியும் யோசனையும் பெற்றுக் கொள்வேன்.

என்னுடைய திட்டம் முற்றிலும் சரியானது என்று நான் பரிபூரணமாக நம்புவதால் சட்ட இலாக்காவுடன் யோசித்து அதற்குத் தக்க சட்ட பூர்வமான உருவத்தைக் கொடுப்பேன். எதற்காக இந்தத் திட்டம் என்பதை விரிவாக விளக்கி வெளியிடுவேன். கிராமவாசிகளைப் போலவே மில் முதலாளிகளும் பிறரும் அந்தத் திட்டத்தில் கலந்து கொள்வார்கள். சர்க்கார் செய்வதாய் இருந்தாலும் அது ஜனங்களுடைய திட்டமே என்று அறிவிப்பேன். சர்க்கார் பணம் பரம ஏழைகளாயுள்ள கிராம வாசிகளின் நன்மைக்காகவே உபயோகப் படுத்தப்படும். நிபுணர்கள் தாங்களாகவே மனமுவந்து உதவி செய்வார்கள். சிப்பந்திச் செலவு மிகக் குறைவாய் இருக்கும். அதனால் ஜனங்களுக்கு அதிகமான லாபந் தரக்கூடிய திட்டமாய் இருக்கும். என்னுடைய திட்டத்தால் எவ்வளவு செலவு, ஜனங்களுக்கு எவ்வளவு நன்மை என்பதைக் குறித்து விபரமாக ஜனங்களுக்கு அறிவிப்பேன்.

நான் மந்திரி என்ற நிலைமையில் யோசிக்கவேண்டிய ஒரே விஷயம் யாதெனில் இத்தகைய கதர் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஆர்வமும் ஆற்றலும் அகில இந்திய சர்க்கா சங்கத்துக்கு இருக்கிறதா என்று கவனிப்பதே யாகும். அந்தச் சங்கத்துக்கு அவை யிருக்குமானால் நான் என்னுடைய சிறு தோணியை தைரியமாகக் கடலில் மிதக்க விடுவேன்.

டில்லிக்குப் போகும் ரயிலில் - 26-8-46 - மோ. க. காந்தி.

## காங்கிரஸ் மந்திரி சபையும் கிராம முன்னேற்றமும்

மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டிருப்பது சட்டசபை வேலை செய்து பார்ப்பதற்காகவன்று. பரிபூரண சுயேச்சை மூலம் பாமர மக்களுக்குக் காங்கிரஸ் மகாசபை செய்ய விரும்பும் நன்மைகளைச் செய்வதற்காகவே யாகும். நம்முடைய பொருளாதாரத் திட்டத்தின் லட்சியம் யாது? நாம் நிர்மாணிக்க விரும்பும் சமூக அமைப்பின் லட்சணம் யாது? கிராமங்களில் செழிப்பை உண்டாக்க வொட்டாமல் தடுத்து நிற்கும் பொருளாதாரத் தடைகளும், நிர்வாகத் தடைகளும் எவை? இந்தக் கேள்விகளைப் பற்றித் தான் பல மாகாணங்களிலிருந்தும் வந்திருந்த தொழில் மந்திரிகள் ஜூலை மாதம் 31உ பூனாவிலுள்ள சட்டசபை மண்டபத்தில் கூடி ஆலோசனை செய்தார்கள்.

காந்தியடிகள் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாகத் தம்முடைய கருத்தை 30 நிமிஷ நேரம் விளக்கிச் சொன்னார்:—

"நயி தாலிம் என்னும் மூலாதாரக் கல்வித் திட்டத்துக்கும் கதர் உட்பட கிராமக் கைத்தொழில் திட்டத்திற்கும் அடிப்படையாகவுள்ள கருத்து ஒன்றே. பெரிய நகரங்களைப் பெருமைப்படுத்தாமல் கிராமங்களைப் பெருமைப்படுத்துவதும் மெஷின்களைப் பெருமைப்படுத்தாமல் மனிதனைப் பெருமைப்படுத்துவதுமே அந்த அடிப்படைக் கருத்து. இந்தியா வசிப்பது கைக்குள் அடங்கக் கூடிய தொகையாயுள்ள பெரிய நகரங்களில் அன்று. ஏழு லட்சம் கிராமங்களிலேயே யாகும். பட்டணங்களும் கிராமங்களும் நியாயமான முறையில் பரஸ்பரம் உதவி செய்யும்படி செய்வதே இப்பொழுது தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாகும். இப்போது பட்டணங்கள் கிராமங்களைக் கெடுத்தே வாழ்ந்து வருகின்றன"

### மெஷின் யுகம்

மேலும் காந்தியடிகள் கூறினர் :—

"நம்முடைய காலத்தை மெஷின் யுகம் என்று கூறுகிறார்கள். அதற்குக் காரணம் மெஷினே நம்முடைய பொருளாதாரத்தை நிர்வகித்துக் கொண்டிருப்பதே யாகும். ஆனல் மெஷின் என்பது யாது? ஒரு விதத்தில் மனிதனே ஜீவசிருஷ்டிகளி லெல்லாம் அதி அற்புதமானமெஷினவான். அதுமாதிரியானமெஷினை யாரும் செய்து விட முடியாது. மனிதன் செய்யும் மெஷின் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வேலையில்லாமல்செய்துவிடும். ஆனல் மனிதனகியமெஷினே மனிதனுக்கு வேலை யில்லாமல் செய்து விடான், மனிதனுக்கு உதவியே செய்வான். இதுதான் மனிதனுக்கும் மெஷினுக்குமுள்ள முதல் வித்தியாசம். மெஷின் உற்பத்திக்கு எல்லை வகுக்க முடியாது; மெஷினை நாளுக்கு நாள் நல்லதாகச் செய்து கொண்டு போகவும் செய்யலாம். இது இரண்டாவது வித்தியாசம். இந்த வித்தியாசமே மூன்ருவது வித்தியாசத்தையும் உண்டாக்கி விடுகின்றது. மெஷின் மனிதனுக்கு விரோதி. ஒரு மெஷின் ஆயிரம் பேர் வேலையைச் செய்ய ஆரம்பித்து அவர்களுக்கு வேலை யில்லாமலோ அல்லது குறைந்த வேலை யுள்ளதாகவோ செய்து விடுகின்றது. அப்படி அது செய்வது விரும்பத் தக்கது என்பதற்காகவன்று, அது அப்படித் தான் செய்ய முடியும், வேறு விதமாகச் செய்ய முடியாது. அந்தமாதிரி அது எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் அது அமெரிக்கா தேசத்தில் செய்து வருகின்றது.

நான் இன்றுதான் மெஷின் கூடாது என்று சொல்வதாக எண்ண வேண்டாம். தென் ஆப்பிரிக்காவில் மெஷின்களிடையில் வாழ்ந்த காலமாகிய 1908ம் வருஷத்துக்கு முன்னதாகவே சொல்லி வருகின்றேன். மெஷின்கள் பிரமாதமாக முன்னேறி யிருப்பது உண்மைதான். ஆனல் அவ்வளவுக்கவ்வளவு எனக்கு வெறுப்பே அதிகரித்திருக்கின்றது. பாமர மக்களை அழுத்திச் சுரண்ட விரும்பினல் மெஷினைப் போன்ற சாதனம் வேறு கிடையாது என்பதும், சமூக வாழ்வில் சகல மக்களும் சரிசமமாக வாழ வேண்டுமானல் மெஷினுக்கு இடந்தரவே கூடாது என்பதும் அப்பொழுது எனக்கு விளங்குவதாயிற்று. மெஷின் மனிதனுக்கு எவ்வித உயர்வும் அளித்து விடவில்லை. அதைச் சரியான முறையில் உபயோகிக்காவிட்டால் அது உலகத்துக்குச் சேவை செய்யாது என்பதும் மக்கள் வாழ்வைக் குலைத்து விடவே செய்யும் என்பதும் என்னுடைய நம்பிக்கை.

அதன்பிறகு நான் தர்பன் நகரத்திலிருந்து ரயிலில் பிரயாணம் செய்தபொழுது ஆங்கிலஞானி ரஸ்கின் என்பவர் எழுதியுள்ள "இறுதி வரைக்கும்" என்னும் நூலைப் படித்தேன். அது உடனே என்னுடைய இருதயத்தை அப்படியே ஆட்கொண்டு விட்டது. மனித ஜாதியானது முன்னேறவும் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் தன் லட்சியத்தை அடையவும் வேண்டுமானல் "இறுதி வரைக்கும்"

என்னும் நூலில் கூறப்பட்டுள்ள தத்துவத்தை ஏற்று நடந்து தீர வேண்டும் என்பதை வெகு தெளிவாகக் கண்டு கொண்டேன். மனித ஜாதி தான் முன்னேறும்பொழுது தன்னுடன் ஊமைகளையும் நொண்டிகளையும் கூடக் கூட்டிச் செல்லவே வேண்டும். தர்மராஜராகிய யுதிஷ்டிரர் தம்முடைய விசுவாச முள்ள நாயை விட்டு விட்டுச் சொர்க்கத்துக்குப் போகமாட்டேன் என்று சொன்னார் அல்லவா?

### மந்திரிகளும் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கமும்

மெஷின் யுகத்தில் பலவீனர்களுக்கு இடங் கிடையாது. அவர்கள் ஒழிவார்கள். பலமுள்ளவர்களே நிற்பார்கள். ஆனால் அது வன்று நான் ஸ்தாபிக்க விரும்பும் சுதந்திர இந்தியா. அதில் பலவீனர்களில் பலவீனர்களுக்குக்கூட இட முண்டு. அதனால் நாம் எவ்வளவு மனித சக்தி கிடைக்குமோ அவ்வளவு மனித சக்தியையும் உபயோகித்துத் தீர்த்த பின்னரே மெஷின் சக்தியை உபயோகிக்க வேண்டும்.

அந்த அடிப்படைத் தத்துவத்தை வைத்தே நான் தாலிமி சங்கத்தையும் அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தையும் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தேன். ஜனங்களுடைய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபையைப் பலப்படுத்துவதே அவற்றின் நோக்கம். காங்கிரஸ் மகாசபையே இந்த சுயாட்சி முறையில் நடக்கும் ஸ்தாபனங்களைச் சிருஷ்டி செய்தது. ஆதலால் காங்கிரஸ் மந்திரி சபைகள் இந்த ஸ்தாபனங்களின் உதவியை எந்த நேரத்திலும் எந்த விதமான தயக்கமுமின்றிக் கோரலாம். காங்கிரஸ் மகாசபையின் முதுகெலும்பாகிய கிராம வாசிகளுக்காகவே அந்த ஸ்தாபனங்கள் உயிர் வாழ்ந்து கொண்டும், உழைத்துக் கொண்டுமிருக்கின்றன. ஆனால், மந்திரி சபைகள் அவைகளை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. இந்த ஸ்தாபனங்களின் லட்சியத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையானால் அவர்கள் அதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடம் தெளிவாகச் சொல்லி விடலாம். நம்பிக்கையில்லாத காரியத்தைச் செய்வதாக நடிப்பது பயன்தராது என்பது மட்டுமன்று, தீமையே உண்டாக்கும். பொருளாதார விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நாட்டுக்கு விமோசனம் உண்டாக வேண்டுமானால் இந்தக் காரியத்தால் தான் நடைபெற முடியும் என்று நான் நம்புவது போலவே நீங்களும் நம்பினால் மட்டுமே நீங்கள் இந்தக் காரியத்தில் இறங்க வேண்டும். நீங்கள் உங்களையும் ஏமாற்றிக் கொள்ளக் கூடாது, பிறரையும் ஏமாற்றக் கூடாது.

### பூமாதேவி

கிராமக் கைத்தொழில்களின் அஸ்திவாரம் விவசாயமேயாகும். பல வருஷங்களுக்கு முன் ஒரு காவியம் படித்தேன். அதில் விவசாயியை உலகத்தின் தந்தையாக வர்ணித்திருந்தது. கடவுள்தான் தருபவர். ஆனால் விவசாயியே அவருடைய கை. அவருக்குச் செலுத்த வேண்டிய கடனை நாம் செலுத்துவது எப்படி? இதுவரை நாம் அவர் நெற்றி வேர்வை நிலத்தில் விழச் செய்த உழைப்பின் பயனையே அனுபவித்து வருகின்றோம். நாம் பயிர்த் தொழிலைச் செய்யவே முதன் முதலாக ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்ய முடியாமல் இருக்கிறோம். அது என்னுடைய குற்றமே யாகும்.

அரசியல் அதிகாரம் கிடைப்பதற்கு முன் எந்த விதமான விவசாயச் சீர்திருத்தமும் செய்ய முடியாது என்று கூறுவோர் உளர். அவர்களுடைய கனவு யாதெனில் நீராவியையும் மின்சாரத்தையும்கொண்டு விவசாயத்தைப் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்பதே யாகும். ஆனால் சீக்கிரமாகப் பெருத்த மாசூல் கிடைக்கும்படியாக நிலத்தின் செழுமையைப் பயன்படுத்த ஆரம்பிப்பது கேடு விளைப்பதாகும். அது நீண்ட நாள் பலன்தரும் திட்டமன்று. நிலம் செழுமையை இழந்து விடுவதற்கான யோசனையே அது. "உயிர்தரும் உணவு வேண்டுமா, நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழையுங்கள்" என்றே நிலம் என்னும் நல்லாள் கூறுகின்றாள்.

என்னுடைய இந்த யோசனையை முன்னேற்ற மில்லாத யோசனை என்றும் தாமதமாகப் பயன் தரும் யோசனை என்றும் குறைகூறக் கூடும். ஆம், அது அவசரம் அவசரமாகப் பலன் தராதுதான். ஆயினும், அதுதான் நிலத்துக்கும் நிலத்தில் வாழும் மக்களுக்கும் க்ஷேமம் தரும் என்று உறுதி கூறுகிறேன். ஆரோக்கியம் தருவதும் போஷணை உள்ளதுமான உணவே கிராம வாசிகளின் பொருளாதாரத்தின் ஆதியும் அந்தமுமாகும். விவசாயியின் குடும்பச் செலவில் பெரும் பகுதி உணவுக்காகும் செலவே யாகும். அதன் பிறகே மற்றச் செலவுகள். விவசாயி போதுமான உணவு உண்ண வேண்டும். சுத்தமான பாலும் நெய்யும் எண்ணெயும் கிடைக்க வேண்டும். அவர் அசைவராயிருந்தால் முட்டை, மாமிசம், மீன் முதலியவைகளும் உண்ண வேண்டும். அவருக்குப் போஷணை உள்ள உணவு போதுமான அளவில் கிடையாவிட்டால் அழகான ஆடைகள் கிடைத்தால் என்ன, கிடையாமல் போனால் என்ன?"

உணவுக்கு அடுத்தபடியாக அவருக்குக் கிடைக்க வேண்டியன நல்ல குடிதண்ணீர் முதலியன. இந்த விஷயங்களை ஆராயும்போது மாட்டைக்கொண்டு உழுவதா, மெஷினைக் கொண்டு உழுவதா, ஏற்றம் கொண்டு இறைப்பதா, பம்புவைத்து இறைப்பதா, என்பன போன்ற விஷயங்களையும் ஆராயவேண்டியதாயிருக்கும், இந்த விதமாகச் சிறுகச் சிறுக ஆராய்ந்து இறுதியில் கிராமப் பொருளாதாரத் திட்டம் பரிபூரணமான நிலைமையில் தீர்மானிக்கப் பெறும். இப்போது நகரங்கள் உடம்பில் காணப்படும் கட்டிகள் போல் தோன்றுகின்றன. அந்த நிலைமை மாறி அவைகள் தமக்கேற்ற நல்ல நிலைமையை அடையும். நாம் கைகளை உபயோகிக்க மறந்து விடும் அபாய நிலைமையில் இருந்துவருகிறோம். நிலத்தை வெட்டித் திருத்திப் பயிர்செய்ய மறந்து விட்டால் அது நம்மையே மறந்து விடுவதாகும். நீங்கள் நகரங்களுக்குச் சேவை செய்வதையே மந்திரிகளின் வேலை என்று தீர்மானித்து விடுவீர்களானால் இந்திய தேசம் 7-லட்சம் கிராமங்களிலேயே வசித்து வருவதை மறந்து விட்டவர்களாவீர்கள். ஆத்மாவைக் கொடுத்து உலகத்தை வாங்குவதானால் அதனால் கிடைக்கக் கூடிய லாபம் யாது?"

### பரிகாரங்கள்

காந்தியடிகள் பேசி முடிந்த பின் கேள்விகள் கேட்கப்பட்டன:—

கேள்வி:—தாங்கள் நகரங்களைச் சமூக உடம்பில் புறப்படும் கட்டிகள் என்று கூறுகிறீர்களே,. அந்தக் கட்டிகளை என்ன செய்ய வேண்டும்?

பதில்:—டாக்டரிடம் கேட்டால் கட்டிக்குச் செய்ய வேண்டியது இது என்று சொல்லுவார். கட்டியைக் கீறியும் குணப்படுத்தலாம், மாவு வைத்துக் கட்டியும் குணப்படுத்தலாம். எட்வார்ட் கார்ப்பெண்டர் என்னும் ஆங்கில அறிஞர் நாகரிகத்தைக் குணப்படுத்த வேண்டிய நோயாகவே கூறினார்.

பெரிய நகரங்கள் வளர்ந்து வருவது அந்த நோயைக் காட்டும் அறிகுறியே யாகும். நான் இயற்கை வைத்தியர். அதனால் உடம்பைச் சுத்தம் செய்வதன் மூலம் குணப்படுத்தும் இயற்கைச் சிகிச்சை முறையையே நான் ஆதரிப்பேன். நகரங்களில் வாழ்வோருடைய மனமானது கிராமங்களையே நாடுமானால் எல்லா விஷயங்களும் சரியாய் விடும். கட்டி வெகு சீக்கிரத்தில் ஆறி விடும்.

கேள்வி :—இப்போதுள்ள நிலைமையில் கிராமக் கைத்தொழில்களை அன்னிய நாட்டுச் சாமான்களிடமிருந்தும் நம் நாட்டு மில் சாமான்களிடமிருந்தும் காப்பாற்றுவதற்குச் செய்ய வேண்டிய காரியங்கள் எவை?

பதில் :—நான் பொதுவாகவே கூற முடியும். நீங்கள் பாமரமக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே பதவி ஏற்றிருப்பதாக நீங்கள் உண்மையிலேயே எண்ணுவதா யிருந்தால் நீங்கள் எது செய்தாலும், சட்டமானாலும் சரி, உத்திரவுகளானாலும் சரி, எல்லாம் கிராமவாசிகளுடைய க்ஷேமத்தைக் கருதியதாகவே இருக்கும். நீங்கள் மில்களுடைய போட்டியிலிருந்து நூல் நூற்பவரையும் துணி நெய்பவரையும் காப்பாற்றவும் பாமர மக்களுக்குத் துணி கிடைக்கும்படி செய்யவும் விரும்புவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் நீங்கள் அதிகாரிகளிடம் யோசனை கேட்பதை விட்டுவிட்டு மில் தொழிலாளிகளைக் கூப்பிட்டு "நாங்கள் மந்திரிகளாயிருக்க வேண்டுமானால் நாங்கள் யாருடைய பிரதிநிதிகளாகவும் யாருடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோமோ அந்தப் பாமர மக்களுக்குப் போதுமான துணி கிடைக்கும் விதத்தில் நீங்கள் துணி உற்பத்திசெய்ய வேண்டும்." என்று சொல்லவேண்டும். நீங்கள் சிலயிடங்களில் கதர் உற்பத்தி செய்யும்படி ஏற்பாடு செய்துகொண்டு அந்தயிடங்களுக்கு மில் துணியை அனுப்பாமலிருக்க ஏற்பாடு செய்யவேண்டும். நீங்கள் கைத்தறியில் நெசவு செய்யக்கூடிய துணிகளை மில்களில் தயாரிப்பதைத் தடுக்கவும் வேண்டும். நீங்கள் அந்தரங்க சுத்தியாக நடப்பதாயிருந்தால் உங்கள் சொல்லைத் தட்டமாட்டார்கள். மனமுவந்து ஒத்துழைப்பார்கள். இந்தோனேஷியா, இந்தியாவின் உணவுப் பஞ்சத்தை எண்ணி இந்தியாவிலிருந்து துணியைப் பெற்றுக்கொண்டு தன்னிடமுள்ள அரிசியை அனுப்ப சமீபத்தில் ஒப்புக்கொண்ட பொழுது இந்திய மில் முதலாளிகள் அப்படி அனுப்புவதற்கு வேண்டிய துணி ரகங்களை உற்பத்தி செய்து தரவில்லையா? ஆனால் எதற்கும் மனத்தில் பரிபூரணமான நம்பிக்கை இருக்க வேண்டும். அது இருந்துவிட்டால் அப்புறம் சகலமும் சரியாக நடந்தேறி விடும்.

சேவா கிராமம் — 18-8-46 — பியாரேலால்.

## கோவா

பிரஜா உரிமைப் பக்தர்களை வேட்டையாடும் விளையாட்டு கோவாவில் குதூகலமாக நடந்துகொண்டே இருக்கிறது. பெரிய தேசம் தவறு செய்ய அஞ்சும். சிறிய தேசங்கள் தாம் சிறியவைகளாக இருக்கும் காரணத்தினாலேயே தவறு செய்ய அஞ்சுவதில்லை. திரு. புருஷோத்தம் காக்கோட்கார் இன்னும் சிறையில் உண்ணாவிரதம் இருந்து கொண்டு தான் இருக்கிறார். சீக்கிரத்தில் இறந்து போகலாம். இறக்கும் வரை சத்தியாக்கிரகம் செய்வதில் நம்பிக்கை யுள்ளவர் யாரும், அவர் இறந்து விட்டால் அதற்காக வருத்தப்பட மாட்டார்கள். இந்த விதமாக மாசற்ற சத்தியாக்கிரகிகளின் மரணம் தான் உண்மையான சுதந்திரத்தின் வித்தாகும். ஆனால் பரோபகாரத்தில் சிறந்ததாயும் ரோமன் கத்தோலிக் சர்ச்சுடன் சேர்ந்ததாயும் பெருமை பேசிக் கொள்ளும் போர்த்துகீசிய அரசாங்கத்தைப் பற்றி என்ன சொல்வது!

அந்த அரசாங்கம் மனிதனுக்கும் கடவுளுக்கும், தான் செய்வது சரிதானென்று நிரூபித்துக் காட்ட வேண்டும். எவ்விதக் குற்றமும் செய்யாமல் இறப்பவர்களுடைய ரத்தமானது அவர்களுடைய கல்லறைகளிலிருந்தும், சாம்பலிலிருந்தும் கதறிக் கொண்டிருக்கும். அந்தக் குரல், உயிரோடு இருப்பவர்களுடைய குரல் எவ்வளவு பலமுடையதாக இருந்தாலும் அதை விட அதிக பலமுடையதாகும்.

டில்லிக்குப் போகும் ரயிலில், – 25-8-46 – மோ. க. காந்தி.

## ஒரு பொழுது போக்கு

விளையாட்டாகப் பொழுது போக்குவதற்குக் காந்தியடிகளுக்கு நேரம் கிடையாது. அத்துடன் அவர் வெகு நாட்களுக்குப் பிறகு சேவா கிராமத்துக்கு வந்திருப்பதால் அவர் அதிகமாக வேலைகள் செய்ய வேண்டியவராயிருக்கிறார். ஆயினும் நேற்றுக் கொஞ்ச நேரம் விளையாட்டாகப் பொழுது போக்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஸ்ரீ அரிய நாயகம் 7 வது வகுப்பு மாணவர்கள் ஒன்பது பேர்களைக் காந்தியடிகளிடம் அழைத்து வந்தார். இவர்கள் சேவா கிராமத்திலுள்ள மூலாதாரப் பாடசாலையில் 7 வருஷ காலம் படித்துத் தங்கள் கல்வியை முடித்திருந்தார்கள். இவர்கள் சேவாகிராமத்தையும் அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களையும் சேர்ந்தவர்கள். பள்ளிக் கூடத்துக்குப் போகாமல் வயல்களில் வேலை செய்யும் சிறுவர்களுடன் ஒப்பிட்டால் இவர்கள் மூலாதாரக் கல்வித் திட்டப்படி படித்த முதற் தொகுதியினரா யிருந்தாலும் நல்ல பயன் தரக்கூடியவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் சுத்தமானவர்களாகவும் நல்ல விதமாக நடந்து கொள்ளத் தெரிந்தவர்களாகவும் கட்டுப்பாடும் ஒழுங்கும் உடையவர்களாகவும் இருந்தார்கள்.

காந்தியடிகள் அவர்களுடன் ஹாஸ்யமாகப் பேச ஆரம்பித்தார். அவர்களும் அப்படியே பேசி மகிழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் "மூலாதாரப் பாடசாலையில் 7 வயது முதல் 14 வயது வரைப் படித்துத் தேறும் மாணவர்கள் எந்த விதமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் கூறியதன் சாரமாவது :—

நான் நினைக்கும் வண்ணம் நீங்கள் இந்த மூலாதாரப் பாடசாலையில் கல்வி பெற்றிருந்தால், 14 வயதுச் சிறுவர்களாகிய நீங்கள் உண்மையாயும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் இருக்க வேண்டும். நீங்கள் கிராமங்களிடம் அன்புடையவர்களாக இருக்க வேண்டும். உங்கள் மூளையும் கைகளும் ஒருங்கே வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். உங்களிடம் எந்த விதமான பித்தலாட்டமும் காணப்படக் கூடாது. உங்கள் புத்தி கூர்மையா யிருக்க வேண்டும். ஆனால் பணம் சம்பாதிக்க வேண்டுமே என்று கவலைப்படக் கூடாது. எந்த யோக்கியமான வேலை கிடைத்தாலும் அதைச் சீர்பெறச் செய்ய வேண்டும். நகரங்களுக்குப் போக ஆசைப்படலாகாது. நீங்கள் உங்கள் பாடசாலையில் வைத்து, ஒத்துழைக்கவும் சேவை செய்யவும் கற்று வந்திருப்பதால் நீங்கள் போகுமிடங்களிலெல்லாம் அந்த நல்ல குணங்களைப் பரப்ப வேண்டும். நீங்கள் ஒரு நாளும் பிச்சை கேட்கவும் கூடாது, பிறரைச் சார்ந்து நிற்கும் புல்லுருவியாக இருக்கவும் கூடாது.

சேவா கிராமம் — 21-8-46 — அமிர்த கௌரி.

## இங்கிலீஷில் நோட்டீஸ் எழுதுதல்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

தாங்களும் காங்கிரஸ் சர்க்கார்களும் இங்கிலீஷில் பாடம் சொல்லிக் கொடுப்பதை உடனே நிறுத்திவிட வேண்டு மென்று கூறுகிறீர்கள். காரியாலயங்கள் தெருக்கள் பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் போன்ற இடங்களில் காணப்படும் போர்டுகளில் சுதேச பாஷையிலேயே எழுத வேண்டு மென்று நீங்கள் உங்கள் செல்வாக்கை ஹரிஜன் பத்திரிகையின் மூலம் உபயோகிக்கமாட்டீர்களா? சர்க்கார் இப்படிச் செய்தால் ஜனங்களும் அப்படிச் செய்வார்கள். கம்பெனிகள் இங்கிலீஷில் போர்டு எழுதித் தொங்கவிட வேண்டு மென்ற சட்டத்தை உடனே மாற்ற வேண்டும்"

இப்பொழுது ஜனங்கள் சுதேச பாஷையில் எழுதுவதையே அதிகமாக மேற் கொள்கிறார்கள் என்று எண்ணுகிறேன். சர்க்கார் காரியாலயங்களில் அந்த விதமாகத்தான் செய்ய வேண்டும். கம்பெனி விஷயமான சட்டத்தை உடனே மாற்ற வேண்டியது அவசியமேயாகும்.

சேவாகிராமம், — 19-8-46 — மோ. க. காந்தி.

## மிஷின் தொழிலுக்கு ஒரு மாற்றுத் திட்டம்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

இந்தியாவில் கப்பல்கள் ரயில் எஞ்சின்கள் ஆகாய விமானங்கள் ஆகியவை உட்பட சகல சாமான்களும் செய்யும்படியாக மெஷின் தொழிலை ஏற்படுத்துவது அவசியம் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இல்லையானால் இந்தியா சுதந்திர தேசத்திற்குரிய தன்னுடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வேறு எந்த மாற்றுத் திட்டத்தைக் கூறுவீர்கள்? மிஷின் தொழிலை ஏற்படுத்துவதில் உங்களுக்கு நம்பிக்கை யிருக்குமானால் அவைகளை யார் மேல்பார்ப்பது? அவைகளில் கிடைக்கும் லாபத்தை யார் கட்டுப்படுத்துவது? இது விஷயமாகத் தங்கள் அபிப்ராயம் என்ன ?"

எந்த தேசத்துக்குமே மிஷின் தொழில் எந்தக் காரியத்துக்கும் அவசியமில்லை. நம்முடைய தேசத்துக்குக் கொஞ்சம் கூட அவசியமில்லை. அது மட்டு மன்று. சுதந்திர இந்தியா கஷ்டப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் உலகத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமையைச் சரி வர நிறைவேற்றுவதற்குள்ள ஒரே மார்க்கம் தன்னுடைய ஆயிரக்கணக்கான ஜனங்களை எளிய முறையில் உன்னதமான லட்சியங்களோடு வாழும்படியாகச் செய்து இதர தேசத்து மக்களோடு போரிடாமல் சமாதானமாக இருக்கும்படி செய்வதேயாகும். பணத்தை தெய்வமாகக் கும்பிட்டு அனாவசியமான ஆடம்பரங்களை பெருக்கிக் கொண்டு வாழும் வாழ்க்கை உன்னதமான லட்சியங்களுக்கு முற்றிலும் முரண் பட்டதாகும். பெருந்தன்மையாக வாழும் வித்தையைக் கற்றுக் கொண்டால்தான் வாழ்வில் கிடைக்கக் கூடிய உண்மையான நன்மைகளை அடைவோம். அபாயத்தில் அகப்பட்டுக் கொள்ளும் விதத்தில் வாழ்வதில் ஒரு வித உற்சாகம் உண்டு. ஆனால் அபாயத்தை எதிர்த்து வாழ்வதற்கும் அபாயத்தில் அனாவசியமாக சிக்கிக் கொள்ளும்படி வாழ்வதற்கும் வித்யாச முண்டு. துஷ்ட மிருகங்களும் துஷ்ட மனிதர்களும் நிறைந்துள்ள காட்டில் துப்பாக்கி இல்லாமல் கடவுளை மட்டும் துணையாகக் கொண்டு தனியாக வாழ்பவர் அபாயத்தை எதிர்த்து வாழ்பவராவார். ஜனங்கள் மெச்சுவதற்காக சதாகாலமும் ஆகாயத்தில் பறப்பவரும் தண்ணீரில்மூழ்குபவரும் அனாவசியமாக அபாயத்தில் சிக்கிக் கொள்ளும் விதத்தில் வாழ்பவராவார். ஒன்றுலட்சியத்தோடுகூடியவாழ்வு; மற்றது லட்சியமில்லாத வாழ்வு.

உலகத்திலுள்ள சகல தேசங்களும் சர்வாயுதபாணிகளாக இருக்கின்றன. சகலவிதமான சுகபோகங்களையும் அனுபவித்து வருகின்றன. நம்முடைய தேசம் பரப்பளவிலும், ஜனத் தொகையிலும் பெரியது. ஆனாலும் உலகமுள்ள நிலைமையில் நம்முடைய தேசம் தனித்து நின்று எளிய வாழ்க்கை வாழ முடியுமா என்று கேட்கலாம். அதற்குப் பதில் வளைத்து வளைத்துச் சொல்லாமல் நேராகச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். எளிய வாழ்வு தான் மனிதன் வாழத் தகுந்த வாழ்வு என்பதை ஒப்புக் கொண்டால் ஒரு மனிதனே அல்லது ஒரு தேசமே அப்படி வாழ முயல்வதாய் இருந்தாலும் அந்த முயற்சி செய்யத் தகுந்த முயற்சியே யாகும்.

ஆயினும் அதே சமயத்தில் சில மூலத் தொழில்கள் அவசியமென்றே நான் கருதுகிறேன். எனக்கு நாற்காலியில் சாய்ந்து கொண்டு கனவு காணும் பொது உடைமையிலும் நம்பிக்கையில்லை, ஆயுத பலங்கொண்டு ஏற்படுத்தும் பொது உடைமையிலும் நம்பிக்கையில்லை. எல்லோரையும் திருத்திய பிற்பாடு ஆரம்பிக்கலா மென்று காத்துக் கொண்டிராமல் என்னுடைய கொள்கைப்படி உடனடியாகக் காரியங்கள் செய்ய வேண்டுமென்றே எண்ணுகிறேன். ஆதலால் என்ன என்ன மூலத் தொழில்கள் வேண்டுமென்று குறிப்பிட வேண்டியதில்லை. பலர் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து வேலை செய்யக் கூடிய சில தொழில்களை சர்க்கார் சொந்தத்தில் வைத்து நடத்துவது அவசியமாகும். அப்படி ஜனங்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கும் பொருள்கள் சர்க்கார் மூலமாக அவர்களுக்கே சொந்தமாகும். அத்தகைய சர்க்கார் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். ஆதலால் பலாத்காரமாகப் பணக்காரர்களிடமிருந்து பறித்துக் கொள்ளாமல் சர்க்காரிடம் கொடுத்து விடும்படியாக அவர்களுக்கு யோசனை கூறுவேன். பணக்காரர்களாய் இருந்தாலும் பாப்பர்களாய் இருந்தாலும் சமூகத்தில் யாரும் பறையர்கள் ஆகமாட்டரார்கள். எல்லோரும் சரிசமானமான மக்களே யாவார்கள். பணம் உடைமையும் பணம் இன்மையும் ஒரே நோயாலுண்டான இரண்டு புண்களாகும்.

நாம் இதுவரை மனிதப் பண்பு அற்ற மிருகச் செயல்கள் எத்தனையோ பார்த்திருக்கிறோம். இன்னும் எத்தனையோ பார்க்கப் போகிறோம். ஆனாலும் என்னுடைய கொள்கை இதுதான்.நாம் எல்லோரும் அபாயத்தை எதிர்த்து வாழ்வோமாக.

டில்லிக்குப் போகும் ரயிலில் – 25-8-46 – மோ. க. காந்தி.

---

### முக்கிய குறிப்பு

தமிழ் ஹரிஜனில் வரும் கட்டுரைகளைச் சில ஆசிரியர்கள் தங்கள் பத்திரிகைகளில் எடுத்துப் பிரசுரிப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். அப்படிப் பிரசுரிக்கும் கட்டுரைகளின் அடியில் தமிழ் ஹரிஜனிலிருந்து எடுக்கப்பட்டன என்பதைத் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

ஆசிரியர்:

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0
ஆறுமாத சந்தா " " ரூ. 3 8 0

**தமிழ் ஹரிஜன்,**

தியாகராயநகர் :: சென்னை.

---

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணுமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை